**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

முன்னிலை : திருமதி. மு.அலிமா, பி.ஏ., எல்.எல்.எம்,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 18–ம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.19 of 2017</u>**

**<u>CNR No.TNTS08-000013-2017</u>**

செந்தில்குமார் ----- வாதி

/ எதிர் /

ஹரீஷ்குமார்
(மேற்படியார் அவரது பவர் ஏஜெண்டான
கண்ணன் மூலம்) ----- பிரதிவாதி

இந்த வழக்கானது 11.02.2026-ம் தேதி இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு செய்தித்தாள் மூலம் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் பிரதிவாதி 20.08.2018 ம் தேதி இந்நீதிமன்றத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் வாத உரை ஆகியவைகளை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்துவந்த இவ்வழக்கில் இன்று இந்நிதிமன்றம் வழங்கும்,

## <u>தீ ர் ப் பு ரை</u>

இவ்வழக்கானது வாதி தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் 1908, பிரிவு 26 மற்றும் கட்டளை VII, விதி 1 ன் கீழ், பிராதின் தபசில் சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கு எதிரில் விளம்புகை செய்வதன் மூலம் பிராதின் தபசில் சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்துவருவதை பிரதிவாதியோ, அவரின் வாரிசுகளோ, வகையறாக்களோ, வேலையாட்களோ, ஏஜெண்ட்களோ அல்லது மற்றவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு பிரதிவாதி வகையறாவுக்கு எதிரில் ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்புவிக்கும்படிக்கும், பிரதிவாதி பெயருக்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ள

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:28:38 +0530

06.10.2008 தேதிய கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண்.2407/2008 பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து செல்லத்தக்கதில்லை என்று தீர்மானித்து குறித்ததை ஆற்றிப்போகும் சட்டம் பிரிவு 31ன்படி இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும் தீர்ப்பாணை நகலை மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி மேற்படி சார்பதிவாளர் அவர்களால் அவர்களின் அலுவலக கோப்புகளில் செல்லத்தக்கதில்லை என்ற உரிய பதிவு மேற்கொள்ள தகுந்த உத்தரவு பிறப்புவிக்கும்படிக்கும் மற்றும் இவ்வழக்கின் செலவுத் தொகை வேண்டியும் வாதியால் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>**வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்**</u> :

பிராதின் தபசிலாக காட்டப்பட்டுள்ள சொத்துக்களான புல எண்.325—ல் இருந்த வந்த 4 ஏக்கர் 33 செண்டில் தென்புறம் இருந்துவந்த 1 ஏக்கர் 53 செண்ட் நிலம் ஆதியில் சுப்பா நாயக்கர் மனைவி மங்கம்மாளுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றும், மேற்படியாள் மேற்படி சொத்தை 22.08.1972 தேதியில் பதிவுக்கிரைய ஆவணமூலம் வெங்கிடசாமி நாயக்கர் குமாரர் சங்கரப்ப நாயக்கருக்கு கிரையம் செய்து கொடுத்திருந்தார் என்றும், அதன்படி மேற்படி சங்கரப்ப நாயக்கர் மேற்படி சொத்தை அனுபவித்து வந்து அப்பால் மேற்டி சங்கரப்ப நாயக்கர் (1) மற்றும் கூடுதல் விஸ்தீரணத்திற்கு பாத்தியப்பட்ட வெங்கய்யா நாயக்கர் குமாரர் ராமசாமி நாயக்கர் (2) ஆகிய இருவரும் மேற்கூறிய புல எண்.325ல் இருந்து வந்த 4 ஏக்கர் 33 செண்டில், தென்புறம் இருந்த 2 ஏக்கர் 18 செண்டை வாதியின் தந்தையான சீனிவாச நாயக்கர் அவர்களுக்கு 13.12.1972 தேதிய பதிவுக்கிரைய ஆவணமூலம் கிரையம் கொடுத்திருந்தார்கள் என்றும், மேற்படி புல எண்.325—ல் இருந்துவந்த 4 ஏக்கர் 33 செண்டில் வடபுறம் இருந்துவந்த 2 ஏக்கர் 25 செண்ட் நிலம் சுப்பா நாயக்கர் குமாரர் சீனிவாச நாயக்கர் வகையறாவுக்கு பாத்தியப்பட்டிருந்து, மேற்டி சொத்தை மேற்படியார்கள் 17.07.1972 தேதிய பதிவுக்கிரைய ஆவணமூலம் வாதியின் தந்தையான சீனிவாச நாயக்கருக்கு கிரையம் கொடுத்திருந்தார்கள் என்றும், மேற்படி கிரைய ஆவணத்தில் கண்ட சொத்து புது உட்பிரிவின்படி புல எண்.325/1ல் உள்ள 2 ஏக்கர் 25 செண்ட் நிலமாகும் என்றும், மேற்படி புல எண்.325/1 சொத்தைப் பொறுத்து சங்கரப்ப நாயக்கர் உரிமை கொண்டாடியதால், அந்த சங்கரப்ப நாயக்கர் தனக்காகவும் அப்போது இளவராக இருந்த அய்யலுசாமிக்கு காப்பாளராகவும் இருந்து கொண்டாடும் பாத்தியதையை 13.12.1972 தேதிய விடுதலை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:28:44 +0530

ஆவணமூலம் சரியான பிரதிபிரயோஜனத்தின்பேரில் மேற்படி சீனிவாசக நாயக்கருக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், மேற்கூறிய முறையில் பிராதின் தபசில் சொத்துக்கள் முழுவதும் சீனிவாச நாயக்கர் பெயரில் பாத்தியதை பெறப்பட்டிருந்து அவரால் சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவம் செய்துவரப்பட்டது என்றும், மேற்படியார் பெயரில் பிராதின் தபசில் சொத்து 198 என நிலவுடைமை குறிப்பேடும் அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சீனிவாசக நாயக்கர் பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து யாதொரு ஏற்பாடும் செய்து வைக்காது அவரது மக்களான (1) சுப்பாலட்சுமி (2) ஆவுடைத்தாய் (3) பத்மாவதி (4) அய்யணு நாராயண சுப்புராஜ் (5) செந்தில்குமார் (வாதி) ஆகியோர்களை அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு 12.07.2000 தேதியில் காலமாகிவிட்டார் என்றும், மேற்படி சீனிவாச நாயக்கரின் மனைவியான முத்துலட்சுமி என்பவர் அவரின் கணவர் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்றும், அதனால் பிராதின் தபசில் சொத்து மேற்படி வாரிசுகள் 5 பேரும் வாரிசுகள் நிலையில் அடைந்து அனுபவித்து வந்து மேற்படியார்கள் அவர்களுக்குள் 2001ம் வருட ஆரம்பத்தில் செய்துகொள்ளப்பட்ட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டில், பிராதின் தபசில் சொத்துக்கள் வாதி பாகத்திற்கு கிடைக்கப்பெற்று வாதி பெயரில் பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து தனிப்பட்டா பட்டாஎண்.250 என ஏற்பட்டு வாதியால் தீர்வை செலுத்தி பிராதின் தபசில் சொத்துக்கள் சர்வசுதந்திரமாக அனுபவம் செய்துவரப்படுகிறது என்றும், வாதியின் தந்தை உயிருடன் இருந்த காலத்தில், குருவிகுளம் கூட்டுறவு நிலவள வங்கியில் பிராதின் தபசில் சொத்துக்களை ஈடுகாட்டு 18.03.1997 தேதிய பதிவு அடமான ஆவண மூலம் சீனிவாச நாயக்கர் மற்றும் அவர் மக்களால் அடமான ஆவணம் பிறப்புவித்து கொடுக்கப்பட்டு கடனும் பெறப்பட்டிருந்து என்றும், அப்பால் 07.06.2012 தேதிய பதிவு பணப்பற்று ரசீது மூலம், வாதி தொகை கொடுத்து மேற்படி அடமானத்தை மீட்டியும் வாதி பிராதின் தபசில் சொத்தை அனுபவித்து வருகிறார் என்றும், பிராதின் தபசில் சொத்துக்களில் வாதியைத் தவிர வேறு யாருக்கும் எவ்வித பாத்தியதையோ, உரிமையோ, அனுபவமோ கிடையாது என்றும், பிராதின் தபசில் சொத்தான 4 ஏக்கர் 33 செண்ட் நிலத்தில் பாத்தியதை இருந்த சங்கரப்ப நாயக்கர் வாதியின் தந்தைக்கு 13.12.1972 தேதிய பதிவுக்கிரைய மூலமும் மற்றும் 13.12.1972 தேதிய விடுதலை ஆவணமூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றும், ஆதலால் மேற்படி சங்கரப்ப நாயக்கர் வாரிசுகளுக்கு அதில் யாதொரு உரிமையும் வாரிசுரிமைப்படி சென்றடையக்கூடியதில்லை என்றும், சங்கரப்ப நாயக்கரின் மனைவியான குருவம்மாள் (1) மக்களான அய்யலுசாமி (2)

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:28:52 +0530

சுப்பாலட்சுமி (3) மற்றும் ஆவுடைத்தாய் (4) ஆகிய நால்வரும் அவர்களுக்கு புல எண்.325 ல் பாத்தியதை இருந்ததாக பிரஸ்தாபித்து ஒரு மோசடியான பதிவு பொது அதிகார ஆவணமான கோவில்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் புத்தகம் –4, ஆவண எண்.1997/2008 ன் படி கருப்பசாமி குமாரர் பொன்மாடசாமிக்கு பவர் ஆவணம் பிறப்பித்துக் கொடுத்திருந்ததாகவும், அவர் பவர் ஆவணத்தின்படி மேற்படி பொன்மாடசாமி வாதியின் பவர் ஏஜெண்டான கண்ணன் என்பவருக்கு 06.10.2008 தேதிய பதிவுக்கிரைய ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி கிரையப்படி இந்த பிரதிவாதி பிராதின் தபசில் சொத்தின் எப்பகுதியையும் அனுபவித்து வரவில்லை என்றும், அது ஊர்ஜிதத்திற்கு வரவுமில்லை என்றும், மேற்படி கிரையம் சொத்துக்கு பாத்தியமில்லாத நபர்களால் பவர் ஆவணம் பிறப்புவித்துக் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பவர் ஏஜெண்டிடம் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட ஆவணமாகும் என்றும், மேற்படி ஆவணத்தின் வாதியோ, வாதியின் முன்பாத்தியஸ்தரோ தரப்பினர் கிடையாது என்றும், எனவே மேற்படி ஆவணம் வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியதில்லை என்றும், மேற்படி ஆவணம் வாதியைப் பொறுத்து ஒரு இல்லா நிலையிலான (Void) ஆவணமாகும் என்றும், வாதி அவரின் வகையாள் மூலம் பிராதின் தபசில் சொத்திற்கும் வேறு சொத்திற்கும் கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்தில் 28.05.2012 ல் வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்தபோதுதான், பிரதிவாதியின் கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ள விபரம் வாதிக்கு தெரியவந்தது என்றும், அப்பால் வாதி இந்த பிரதிவாதியின் கிரைய ஆவணத்திற்கு மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் 13.06.2012 ல் சார்பதிவாளர் நகல் பெற்றுப்பார்த்தபோது பிரதிவாதி மோசடியாக பெற்றுள்ள ஆவணத்தைப் பற்றி முழுமையாக தெரியவந்தது என்றும், பிராதின் தபசில் சொத்தின் ஒரு பகுதியைப் பொறுத்து பிரதிவாதி பெற்ற கழுகுமலை சார்பதிவக ஆவண எண்.2407/2008 ஆவணம் வாதிக்கு பிராதின் தபசில் சொத்தின் பாத்தியதையைப் பொறுத்து ஒரு தொடர்நிலையிலான களங்கத்தையும் இடையூறையும் ஏற்படுத்தி வருகிறது என்றும், ஆதலால் மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதில்லை என்று தீர்மானித்து குறித்ததை ஆற்றிப்போகும் சட்டம் பிரிவு 31 ன்படி சமூகமன்ற தீர்ப்பாணையை மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய பதிவை மேற்கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகவுள்ளது என்றும், இல்லாவிடில் வாதிக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும், வாதி, பிரதிவாதி பெற்ற மோசடி ஆவணம் குறித்து காவல்துறை அதிகாரிகளிடம் புகார் கொடுத்திருந்ததில் பிரதிவாதி அவரின் தகாத செல்வாக்கால் சரியான

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:00 +0530

நடவடிக்கை எடுக்காது இருந்துவருகிறார் என்றும், ஆதலால் வாதி இவ்வழக்கை பிராதின் தபசில் சொத்துக்கள் வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டதென பிரதிவாதிக்கு எதிரில் விளம்புகை செய்யவும் மற்றும் அதற்கு அனுசரணையான நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு கோரியும் மற்றும் குறித்ததை ஆற்றிப்போகும் சட்டம் பிரிவு 31ன்படி கடந்த 06.10.2008 தேதிய கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக பதிவு கிரைய ஆவண எண்.2407/2008 பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து செல்லத்தக்கதில்லை என்று தீர்மானித்து இந்நீதிமன்ற தீர்ப்பாணையை மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய பதிவை மேற்கொள்ள உத்தரவிடக்கோரியும் வாதியால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதிக்கு இவ்வழக்கில் செய்தித்தாள் மூலம் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

3) இவ்வழக்கில், வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.15 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதி தொடர்ந்து தோன்றாத்தரப்பினராகவே இருந்து வருகிறார்.

4) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை யாதெனில், வாதி வழக்குரையில் கோரிய பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) <u>**பிரச்சனைக்குரிய தீர்வு**</u> **:-**

6) வாதி தரப்பு வாதஉரை, வா.சா.1ன் சாட்சியம், மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.15 ஆவணங்கள் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டன.

7) வாதியால் இவ்வழக்கானது பிராதின் தபசில் சொத்து வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை செய்து, அதற்கு அனுசரணையாக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு கோரியும், பிரதிவாதி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:08 +0530

பெயருக்கு உற்பத்தி செய்யப்பட்டுள்ள 06.10.2008 தேதிய கழுகுமலை சார்பதிவாளர் அலுவலக பதிவு ஏற்பாடு ஆவண எண்.2407/2008 பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து செல்லத்தக்கதில்லை என்று தீர்மானித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) இவ்வழக்கில் வாதி தரப்பில், வாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.10 ன் பரிசீலனையில் இருந்து, சுப்பா நாயக்கர் மனைவி மங்கம்மாள் 22.08.1972 தேதியில் பதிவுக்கிரைய ஆவணமூலம் வெங்கிடசாமி நாயக்கர் குமாரர் சங்கரப்ப நாயக்கருக்கு மொத்த சொத்தான சர்வே எண்.325 ல் 4 ஏக்கர் 33 சென்டில் தென்புறம் தபசில் சர்வே எண்.325/2 ல் 2 ஏக்கர் 8 சென்டினை கிரையம் செய்து கொடுத்திருந்தார் என்பதையும், மேற்படி சங்கரப்ப நாயக்கர் (1) மற்றும் வெங்கய்யா நாயக்கர் குமாரர் ராமசாமி நாயக்கர் (2) ஆகிய இருவரும் மேற்கூறிய புல எண்.325 ல் இருந்து வந்த 4 ஏக்கர் 33 செண்டில், தென்புறம் இருந்த 2 ஏக்கர் 18 செண்டை வாதியின் தந்தையான சீனிவாசக நாயக்கர் அவர்களுக்கு வா.சா.ஆ.11 ஆன 13.12.1972 தேதிய பதிவுக்கிரைய ஆவணமூலம் கிரையம் கொடுத்திருந்தார்கள் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

9) வா.சா.ஆ.10 ன் படி சங்கரப்ப நாயக்கர் சர்வே எண்.325/2 ல் 2 ஏக்கர் 8 சென்டினை மட்டுமே கிரையம் பெற்றுள்ள நிலையில், வா.சா.ஆ.11 மூலமாக 2 ஏக்கர் 18 செண்டை வாதியின் தந்தையான சீனிவாசக நாயக்கர் அவர்களுக்கு பாத்தியப்படுத்திக்கொடுத்துள்ளார். இருப்பினும், வா.சா.ஆ.2 நில உடமை குறிப்பேடு ஆவணத்தில் சர்வே எண்.325/2 ல் 2 ஏக்கர் 8 சென்ட் குறித்து மட்டுமே வாதியின் தந்தைக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேலும், வாதி பெயரிலான வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 பட்டாக்களிலும் சர்வே எண்.325/2 ன் விஸ்தீரணம் 84 ஏர் (2 ஏக்கர் 7 சென்ட்) என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வாதியால் இவ்வழக்கில் தபசில் 2 வது அயிட்ட சொத்திற்கான விஸ்தீரணத்தில் 84 ஏர் (2 ஏக்கர் 7 சென்ட்) என மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

10) மேலும் வா.சா.ஆ.12 ன் மூலமாக புல எண்.325–ல் இருந்துவந்த 4 ஏக்கர் 33 செண்டில் வடபுறம் இருந்துவந்த 2 ஏக்கர் 25 செண்ட் நிலத்தின் உரிமையாளரான சீனிநாயக்கர் வகையறா மேற்படி இடத்தை 17.07.1972 தேதிய

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:16 +0530

பதிவுக்கிரைய ஆவணமூலம் வாதியின் தந்தையான சீனிவாசக நாயக்கருக்கு கிரையம் கொடுத்துவிட்டனர் என்பதையும், சங்கரப்ப நாயக்கர் தனக்காகவும் அப்போது இளவராக இருந்த அய்யலுசாமிக்கு காப்பாளராகவும் இருந்து மேற்படி சொத்துமீதான கொண்டாடும் பாத்தியதையை வா.சா.ஆ.13 ஆன 13.12.1972 தேதிய விடுதலை ஆவணம் மூலம் வாதியின் தந்தைக்கு பிறப்பித்து கொடுத்துவிட்டனர் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

11) மேற்கண்ட வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.13 ன் மூலமாக தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் முழுவதும் வாதியின் தந்தையான சீனிவாசக நாயக்கர் பெயரில் பாத்தியதை பெறப்பட்டிருந்து அவரால் சர்வசுதந்திரமாக ஆண்டு அனுபவம் செய்துவரப்பட்டு, மேற்படியார் பெயரில் பிராதின் தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்கு வா.சா.ஆ.2 ன் படி 198 என நிலவுடைமை குறிப்பேடும் அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும், இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

12) இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.14 ல் பரிசீலனையில் இருந்து, வாதியின் தந்தை மற்றும் வாதியால் தபசில் 1, 2 சொத்துக்களுக்கு நிலத்தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பதையும், இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

13) இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ன் பரிசீலனையில் இருந்து, வாதியின் தந்தை உயிருடன் இருந்த காலத்தில், குருவிகுளம் கூட்டுறவு நிலவள வங்கியில் பிராதின் தபசில் சொத்துக்களை ஈடுகாட்டி 18.03.1997 தேதிய பதிவு அடமான ஆவண மூலம் சீனிவாசக நாயக்கர் மற்றும் அவர் மக்களால் அடமான ஆவணம் பிறப்புவித்து கொடுக்கப்பட்டு கடனும் பெறப்பட்டிருந்து என்பதையும், அப்பால் 07.06.2012 தேதிய பதிவு பணப்பற்று ரசீது மூலம், வாதி தொகை கொடுத்து மேற்படி அடமானத்தை மீட்டியுள்ளார் என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

14) மேலும், இவ்வழக்கில் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக வாதியின் தந்தையின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாதியின் தந்தையான சீனிவாசக நாயக்கர் பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து யாதொரு ஏற்பாடும் செய்து வைக்காமல் அவரது மக்களான (1) சுப்பாலட்சுமி (2) ஆவுடைத்தாய் (3) பத்மாவதி (4) அய்யணு நாராயண சுப்புராஜ் (5)

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:25 +0530

செந்தில்குமார் (வாதி) ஆகியோர்களை அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்பதையும், மேற்படி சீனிவாசக நாயக்கரின் மனைவியான முத்துலட்சுமி என்பவர் அவரின் கணவர் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்பதையும் வாதியே இவ்வழக்கில் ஒப்புக்கொண்டுள்ளார்.

15) மேற்படி சீனிவாசக நாயக்கரின் மேற்படி வாரிசுகள் 5 பேரும் வாரிசுகள் நிலையில் அடைந்து அனுபவித்து வந்து மேற்படியார்கள் அவர்களுக்குள் 2001ம் வருட ஆரம்பத்தில் செய்துகொள்ளப்பட்ட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டில், பிராதின் தபசில் சொத்துக்கள் வாதி பாகத்திற்கு கிடைக்கப்பெற்று வாதி பெயரில் பிராதின் தபசில் சொத்தைப் பொறுத்து தனிப்பட்டா பட்டாஎண்.250 என ஏற்பட்டு வாதியால் தீர்வை செலுத்தி பிராதின் தபசில் சொத்துக்கள் சர்வசுதந்திரமாக அனுபவம் செய்துவரப்படுகிறது என்று வாதி தரப்பில் இவ்வழக்கில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. மேலும், வாதி தரப்பில் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ன்படி தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் குறித்த வாதி பெயரிலான தனிப்பட்டா எண்.250 தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

16) இருப்பினும், இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதியின் குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டை நிரூபணம் செய்ய, வாதியின் தந்தையின் வாரிசுகளான (1) சுப்பாலட்சுமி (2) ஆவுடைத்தாய் (3) பத்மாவதி (4) அய்யணு நாராயண சுப்புராஜ் ஆகியோர் கட்சி சேர்க்கப்படவில்லை. மேற்படியார்கள் சாட்சியாக விசாரணை செய்யப்படவும் இல்லை. இருப்பினும், இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை இவ்வழக்கில் தரப்பினர்களாக அல்லாத நபர்களை கட்டுப்படுத்தாது என்பதால் 1வது வாதியின் உடன்பிறந்த சகோதரிகளையும் கட்டுப்படுத்தாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதியாகும்.

17) மேற்கண்ட வாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் பரிசீலனையில் இருந்து தபசில் 1, 2 அயிட்ட சொத்துக்கள் வாதியின் தந்தைக்கு வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 ன்படி பாத்தியப்பட்டு, வாதிக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டு, வாதி பெயரில் வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆன தனிப்பட்டா பெற்று கரத்தீர்வை செலுத்தி அனுபவம் செய்து வருகிறார் என்பதை வாதி இவ்வழக்கில் நிரூபணம் செய்துள்ளார் என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:33 +0530

18) பிராதின் தபசில் சொத்தான 4 ஏக்கர் 33 செண்ட் நிலத்தில் பாத்தியதை இருந்த அதன் உரிமையாளர்களால் வாதியின் தந்தைக்கு வா.சா.ஆ.11 மற்றும் வா.சா.ஆ.12 கிரைய ஆவணங்கள் மூலமும் மற்றும் வா.சா.ஆ.13 13.12.1972 தேதிய விடுதலை ஆவணமூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டனர் என்பதை வாதி நிரூபணம் செய்துள்ள நிலையில், சங்கரப்ப நாயக்கர் வாரிசுகளுக்கு தபசில் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை.

19) ஆகையால், தபசில் சொத்துக்களை பொறுத்து சங்கரப்ப நாயக்கரின் மனைவியான குருவம்மாள் (1) மக்களான அய்யலுசாமி (2) சுப்பாலட்சுமி (3) மற்றும் ஆவுடைத்தாய் (4) ஆகியோர்கள் பொது அதிகார முகவர் மூலமாக பிரதிவாதிக்கு 06.10.2008 தேதிய பதிவுக்கிரைய ஆவணத்தை பிறப்பிக்க எவ்வித உரிமையும் இல்லை. ஆகையால், மேற்படி ஆவணம் தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் ஒரு இல்லா நிலை (Void) ஆவணமாகும் மற்றும் வாதியைக் கட்டுப்படுத்தக்கூடியதில்லை.

20) மேற்கண்ட வாதி தரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் பரிசீலனையில் இருந்து, வாதி தபசில் சொத்தின் அனுபவத்தையும், உரிமை மூலத்தையும் உரிய ஆவணம் தாக்கல் செய்து நிரூபித்துள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் வாதி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் வா.சா.1ன் சாட்சியத்தையோ மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் ஒருதலைபட்சமாகியுள்ளார்.

21) எனவே, மேற்கண்ட பரிசீலனையில் இருந்து, வாதிக்கு வழக்கில் கோரியவாறு வழக்கு தபசில் சொத்து குறித்து விளம்புகை, அதனை தொடர்ந்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் வா.சா.ஆ.9 ஆன கிரைய ஆவணம் தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என தீர்மானித்து, தீர்ப்பாணை நகலை உரிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய பதிவினை மேற்கொள்ள உத்தரவிடக்கோரிய பரிகாரம் ஆகியவை கிடைக்கக்கூடியது என இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

22) **<u>இறுதியாக,</u>**

இவ்வழக்கானது செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:40 +0530

i) வழக்கு தபசில் சொத்துக்கள் வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை செய்யப்பட்டும்,

ii) மேலும், தபசில் சொத்துக்களை வாதி அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, வேலையாட்களோ அல்லது வாரிசுகளோ யாதொரு வகையிலும், எவ்வித இடையூறுகளும் செய்யக்கூடாதென மேற்படியார்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்பிக்கப்பட்டும்,

iii) மேலும், பிரதிவாதி பெயருக்கு ஏற்பட்டுள்ள வா.சா.ஆ.9 ஆன 06.10.2008 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல (Null and Void) என விளம்புகை செய்யப்பட்டும்,

iv) மேலும், இந்நீதிமன்ற தீர்ப்பாணையை கழுகுமலை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி மேற்படி சார்பதிவாளர் அவர்களால் அவர்களின் அலுவலக கோப்புகளில் வா.சா.ஆ.9 ஆன 06.10.2008 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வழக்கு தபசில் சொத்துக்களை பொறுத்தமட்டில் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்ற உரிய பதிவை மேற்கொள்ள இந்நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்பட்டும்,

v) வாதியின் வழக்கு செலவுத் தொகையை பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டும் என்றும் இவ்வழக்கில் இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் தேதியாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சங்கரன்கோவில்.

**1. வாதி தரப்பு சாட்சி:**

வா.சா.1 – திரு. செந்தில்குமார் (வாதி)

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 27.09.2018 | வாதியின் தந்தை சீனிவாசக நாயக்கரின் இறப்புச் சான்றிதழ் – அசல் |
| வா.சா.ஆ.2 | -- | வழக்குச் தபசில் 1, 2 அயிட்ட சொத்திற்கான வாதியின் தந்தை பெயரில் உள்ள பட்டா எண்.198 க்கான நிலவுடைமை குறிப்பேடு புத்தகம் – அசல் |
| வா.சா.ஆ.3 | 24.05.2012 | வழக்குச் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள பட்டா – ஒளி நகல் |
| வா.சா.ஆ 4 | 29.08.2016 | வழக்குச் சொத்திற்கு வாதி பெயரில் உள்ள கணிணி பட்டா. பட்டா எண்.250 |
| வா.சா.ஆ.5 | 25.02.2005, 13.02.2011, 27.02.2001 | வழக்குச் சொத்திற்கு வாதி பெயரில் செலுத்திய நிலவரி ரசீதுகள் எண்ணம் – 3 |
| வா.சா.ஆ.6 | 18.03.1997 | வாதியும், வாதியின் தந்தையும் ஏற்படுத்திய பதிவு அடமான பத்திரம் –சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 07.06.2012 | அடமான பணப்பற்று ரசீது அசல் |
| வா.சா.ஆ.8 | 28.05.2012 | வழக்குச் சொத்திற்குரிய வில்லங்கச் சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.9 | 06.10.2008 | பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் –சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.10 | 22.08.1972 | சங்கரப்ப நாயக்கர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.11 | 13.12.1972 | வாதியின் தந்தை பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.12 | 17.07.1972 | வாதியின் தந்தை பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் அசல் |

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:29:57 +0530

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.13 | 13.12.1972 | வாதியின் தந்தை பெயரில் ஏற்பட்ட பாத்திய விடுதலை ஆவணம் அசல் |
| வா.சா.ஆ.14 | -- | வழக்குச் சொத்திற்கு வாதி பெயரிலும், வாதியின் தந்தை பெயரிலும் செலுத்தப்பட்ட நிலவரி ரசீதுகள் எண்ணம் 10 அசல் |
| வா.சா.ஆ.15 | 22.03.2021 | 01.01.2000 முதல் 21.03.2021 வரை தபசில் சொத்திற்குரிய வில்லங்கச் சான்று கணிணி நகல் |

**3. பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** – இல்லை.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.18 17:30:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

PDC Court, SNKL.
O.S.No.19 of 2017
Draft/Fair Judgment
Dated : 18.03.2026.